<u>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்</u>

| | |
|---|---|
| அனுப்புதல் | பெறுதல் |
| செயற்பொறியாளர்/இ&ப, | மாவட்ட வன அலுவலர், |
| திமிபவ/ தநாமிவா, | திருப்பத்தூர் கோட்டம், |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர். |

<u>க.எண்: செபொ/இ&ப/திமிபவ/திரு./கோ.வனதுறை/எண்:408/நாள்.11.11.2019,</u>

ஐயா,

பொருள்: மின்சாரம் - திமிபவ – திருப்பத்தூர் கோட்டம் - திருப்பத்தூர் வனசரகத்திற்கு உட்பட்ட ஆண்டியப்பனூர் காப்புகாடு வழியாக புங்கம்பட்டுநாடு கிராமத்தில் புதிய 33/11கி.வோ. துணை மின்நிலையம் அமைத்தல் - 33கி.வோ. புதிய மின்பாதை அமைக்க இடையூராக உள்ள ஒருசில மரங்கள் மற்றும் மரக்கிளைகள் மற்றும் மூங்கில் குத்தல்கள் அகற்ற – அனுமதி கோருதல் சம்மந்தமாக.

பார்வை: மாவட்ட வன அலுவலர்/ திருப்பத்தூர் அவர்களின் ந.க.எண்:4803/2017, நாள்:17.09.2019.

* * * * * *

மேற்காணும் பொருள் தொடர்பாக வனச் சரகத்திற்கு உட்பட்ட ஆண்டியப்பனூர் காப்புகாடு வழியாக புங்கம்பட்டுநாடு கிராமத்தில் புதிய 33/11 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்க, 33 கி.வோ. புதிய மின்பாதை கொண்டுசெல்லும் வழியில் 325 மரங்கள் மற்றும் 222 மூங்கில் குத்தல்கள் உள்ளது என்பதை வனச்சரகர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக நானும் காலந்தாய்வு மேற்கொண்டதில் கண்டறியப்பட்டது. எனவே ஏற்கனவே சென்று கொண்டிருக்கும் 11 கி.வோ மின்பாதையில் விரிவாக்க பணி மேற்கொள்ளும் பொழுது, மின்பாதைக்கு அருகில் உள்ள ஒரு சில மரக்கிளைகள் மற்றும் மூங்கில் குத்தல்களின் கிளைகளை மட்டும் அகற்ற நேரிடும் என்பதை தங்களுக்கு கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

11/11/19

செயற்பொறியாளர்/ இ&ப,
திமிபவ/ திருப்பத்தூர்.